S.M. FERNANDO

Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed

★ ★ ★

580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

பக்கம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் பரிசோதிக்க செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ

★ ★ ★

580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை (10-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 280

# நாடாளுமன்றில் 24 ஆம் திகதி பிரேமா உரை நிகழ்த்துவார்!

## குழப்புவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டம்?

கொழும்பு, செப்டெம்பர் 10

சர்ச்சைக்குரிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கி வைத்து உரை நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி உரை நிகழ்த்தும் சமயம் அவரது உரையைக் குழப்பும் விதத்தில் எதிர்க்கட்சிகள் நடந்து கொள்ளக்கூடும் என்று ஆளும் கட்சி தரப்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை எதிர்க் கட்சிகள் சபாநாயகரிடம் சமர்ப்பித்ததை அடுத்து, நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி பிரேமதாஸா எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு தள்ளிப் போட்டது தெரிந்ததே.

இந்தக் கூட்டத் தொடரை 24 ஆம் திகதியன்று ஜனாதிபதி தொடக்கி வைத்து உரை நிகழ்த்துவார் என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை இந்தக் கூட்டத் தொடரின் போது சபையில் விவாதத்துக்கு எடுக்க சபாநாயகர் இணங்கினாலும், இணங்காவிட்டாலும் ஜனாதிபதி உரையை எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுக் குழப்ப முயற்சிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் நெருக்கடி ஆரம்பமான பின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தாண்டிக்குளத்தில் 4 படையினர் பலி!

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 10

வவுனியாவில் நேற்றுக் காலை இராணுவ வாகன அணிக்கு பாதுகாப்பு அளித்து வந்த படையினர் மீது புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். புலிகளால் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

தாண்டிக்குளத்துக்கும், மரக்காரம்பளைகுளத்துக்கும் இடையில் வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகளால் —

★ ஏ. கே. ரக ரைபிள்-1
★ அதற்குரிய ரவைக் கூடுகள்-5
★ லிங்ரான்-370
★ ரி 56-2 ரகத் துப்பாக்கிகள்-4
★ அதற்குரிய ரவைக் கூடுகள்-19
★ ரவைகள்-840
★ வானொலித் தொடர்புக்கருவி-2

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் 6 படையினர் காணாமற் போயினர்?

கொழும்பு, செப். 10

தாண்டிக்குளம் தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்திருக்கும் அதேவேளை, வவுனியாவில் நிலை கொண்டிருக்கும் படையினரில் ஆறு பேர் காணாமற்போயிருப்பதாகக் கூறப்படுகிறது.

பொதுமக்கள் சிலர் தொலைபேசி மூலம் இத்தகவலைத் தெரிவித்ததாக ஏ. எவ். பி. செய்திகளை மேற்கோள்காட்டி 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது.

இத்தகைய சம்பவம் குறித்து தமக்கு எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார் என்றும் 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

## கொக்குவெளி முகாமில் வியாழன் குண்டு வெடிப்பு!

### 2 படையினர் பலி; 12 பேர் காயம்

வவுனியா, செப். 10

தாண்டிக்குளத்துக்கு அப்பாலுள்ள கொக்குவெளி இராணுவ முகாம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த இராணுவத்தினர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்து வரப்பட்டு, அங்கிருந்து தச்சன் குளம் விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். [உ-எ]

## 35 பொலீஸாரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, செப். 10

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 35 பொலிஸாரின் சடலங்கள் நேற்று முன்தினம் மட்டக்களப்புப் பகுதியில் உள்ள பாசிக்குடா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன என்று கொழும்பில் அரச தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சடலங்கள் புதைகுழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டன என்றும், சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதே போன்று சம்பந்தூரில் 20 பொலிஸாரின் சடலங்கள் கிழக்கில் மீட்கப்பட்டதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

## சாம். தம்பிமுத்து கொலை; சந்தேக நபர் கைதாம்!

மட்டக்களப்பு முன்னாள் எம். பி. சாம் தம்பிமுத்துவின் கொலை தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை இராணுவம் கைது செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த நபரின் பெயர் வெளியிடப்படவில்லை என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

அண்மையில் காத்தான்குடியில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில், சம்பந்தப்பட்ட காரை ஓட்டிச் சென்றவரே இந்த நபர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## 65 பரல் மண்ணெண்ணெய் 'குமாரி' கப்பலில் வரும்!

யாழ்ப்பாணம், செப். 10

யாழ் மாவட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக 65 பரல் மண்ணெண்ணெய்யை அடுத்த வாரம் வரவிருக்கும் 'குமாரி' கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ் அரச அதிபரிடம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. சரித்த ரத்வத்த தெரிவித்துள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழத்தின் முழுமையான வரலாற்று நூல் வேண்டும்!

### வெளியீட்டு விழாவில் மாத்தயா

யாழ்ப்பாணம், செப். 10

''தமிழீழத்தின் முழுமையான வரலாற்று நூல் ஒன்று விரைவில் வெளிக்கொணரப்படவேண்டும்''.

— இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா).

நேற்றுக்காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில், திருத்திய வரலாற்றுத் துணைப் பாடநூல் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டு அவர் சிறப்புரை ஆற்றினார். அவர் மேலும் பேசியதாவது:-

ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கான திருத்திய வரலாற்றுப் பாடநூல் இன்று வெளியிடப்படுகின்றது. தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை நோக்கிய திசையில் ஓர் அடி முன்னே சென்று விட்டதை இது காட்டுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சைக்கிளுக்கு தடை இல்லை

யாழ்ப்பாணம், செப். 10

சைக்கிள்களை இனி மொத்தமாக கொண்டு வருவதற்கு எதுவித தடையும் இருக்க மாட்டாது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. சரித்த ரத்வத்த யாழ். அரச அதிபரிடம் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இதே போன்று சர்க்கரை கொண்டு வருவதற்கான தடையும் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## வடக்கிற்கு வரும் லொறிகள்

### அநுரபுரத்திலேயே இனிமேல் ம. எண்ணெய் நிரப்பலாம்

வடபகுதிக்கு மண்ணெண்ணெய் ஏற்றிச் செல்லத் தரப்பட்டு வரும் லொறிகள் இனிமேல் அநுராதபுரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கிளையில் வைத்தே மண்ணெண்ணெய்யை நிரப்ப வேண்டும்.

— இவ்வாறு புதிய பணிப்புரை ஒன்றை படையினர் விடுத்திருக்கின்றனர்.

நிரப்பும் இடத்தில் படையினர் சோதனை செய்வதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் கொலன்னாவையில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன அலுவலகத்திலேயே வடபகுதி லொறிகள் மண்ணெண்ணெய் நிரப்பி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

## முச்சந்தி முரளி



அப்பா... குமாரியின்ரை வருகையை வழிமேல விழி வைச்சுப் பாத்திருக்க வேணும் போல்லை......!

## முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள அகதிகளுக்கு நிவாரணம் இல்லை

யாழ்ப்பாணம், செப். 10

தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களுக்கு வெளியே உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப்போருக்கான உலர் உணவு நிவாரணத்தை இந்த மாதத்துடன் நிறுத்த அரசு முடிவு செய்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கான நிவாரணத்தை கடந்த மார்ச் மாதத்துடன் நிறுத்த அரசு முடிவு செய்திருந்தது. எனினும் அதற்கு பலத்த எதிர்ப்பு கிளப்பப்பட்டதை அடுத்து தொடர்ந்து நிவாரணம் வழங்க அரசு இணங்கியது.

ஆனால் தற்போது போதிய வெளிநாட்டு உதவி கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி இந்த மாதத்துடன் நிவாரணத்தை நிறுத்த அரசு முடிவு செய்துள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (க-3-5)

## மணலாறில் நேற்றும் தொடர்ந்து மோதல்

மணலாறுப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்றும் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 8-30 மணிக்கு விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் இருந்து முன்னேற முனைந்த இராணுவத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர்.

மோதல் நடைபெறும் இடங்களில் எறிகணை, ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை நேற்று முழு நாளும் முல்லைத்தீவு முகாமில் இருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலினால் தண்ணீரூற்று, வட்டுவாகல், அலம்பில், நாயாறு ஆகிய பகுதிகள் அதிக சேதத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## தமிழகத்திலிருந்து திரும்புவோருக்கு

### மன்னாரில் அகதி முகாம் அமைப்பது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 10

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் ஈழத் தமிழ் அகதிகளை மன்னாரில் வைத்து பராமரிப்பதற்கு வசதியாக முகாம் ஒன்றை அமைப்பது குறித்து ஐ. நா. அகதிகள் ஆணையகத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டபிள்யூ. டி. கிளாரன்ஸ் மன்னாருக்குச் சென்று ஆராய்ந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயம் செய்த அவர் பேசாலையில் உள்ள அகதிமுகாமுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

அரச அதிகாரிகளையும், படை அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசினார். (உ-3)

## கடற்படையின் ரோந்து நெடுந்தீவில் அதிகரிப்பு

நெடுந்தீவு, செப். 10

நெடுந்தீவுக் கடற்பிராந்தியத்தில் — குறிக்காட்டுவான் தெற்கு கடலில் — ஸ்ரீலங்கா கடற்படைப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூவிவேன், அவ்ரோ விமானங்கள் ஆகியவையும் அவ்வப்போது இப்பகுதிகள் மீது அடிக்கடி பறந்து, ரோந்து புரிந்து வருகின்றன. (உ-111)

## ராஜீவ் கொலை; புலிகள் விவகாரம்:

### தி. மு. கழக எம். எல். ஏ. வெளியேற்றப்பட்டார்!

சென்னை, செப். 10

தமிழக சட்ட சபைக் கூட்டத்தில் இருந்து தி. மு. கவைச் சேர்ந்த எம். எல். ஏ. பரிதி இளம்வழுதி சபைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.

நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது, திரு. பரிதி இளம்வழுதி, ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகவும் விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் சில தகவல்களை வெளியிட்டார்.

அதனை காங்கிரஸ் எம். எல். ஏக்கள் பலமாக ஆட்சேபித்தனர். பரிதி இளம்வழுதி கூறிய சில தகவல்கள் சபைக் குறிப்பில் இருந்து சபாநாயகரின் உத்தரவின் பேரில் நீக்கப்பட்டன.

அதன் பின்னரும் அவர் ராஜீவ் கொலை பற்றி பேசவே அவரை சபையில் இருந்து வெளியேற்றும்படி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டார். தி. மு. கவின் மற்றைய எம். எல். ஏயான செல்வராஜன் அதனை ஆட்சேபித்து வெளி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வீமன்காமத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 10

வீமன்காமம் மினிமுகாம் காவலரண் மீது நேற்றுக் காலை எட்டுமணி அளவில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடந்த 88, 89, 90 ஆம் ஆண்டு O/Lக்குரிய வர்த்தகம், கணக்கியல் வினா விடை விற்பனையாகின்றது. அறிவகம், வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். (ெ/0444)

### தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரதும் உடைகளை மிகவும் நாகரீகமான முறையில் வெட்டித் தைத்துக் கொடுக்கக் கூடிய பெண் டெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் தரப்படும். திருமகள் தையல் நிலையம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு. [18041]

குறைந்தது 350 இலேவா வது நிறுக்கக்கூடிய மேடைத் தராசு உடன் தேவை விற்க விரும்புவோர் நிறுக்கக்கூடிய அளவு விலை விவரத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும் சர்வோதய மாவட்ட இணைப்பாளர், 22, சிவன் வீதி இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம். (18054)

### மணமகள் தேவை

கத்தோலிக்க உயர் குலத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் 29 வயது மணமகனுக்கு, படித்த அழகான மணமகள் தேவை. மணமகன் மார்கழி மாதம் இலங்கை வந்து திருமணம் செய்து மணமகளை அழைத்துச் செல்வார். தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும். இல. 16, கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (17903)

### பிரேமவாகினி

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் சொற்பொழிவுகள் விற்பனையாகின்றது. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (ெ-0485)

## திமிலதீவில் ராணுவ முகாம்

மட்டக்களப்பு, செப். 10

திமிலதீவு விஷ்ணு ஆலயத்துக்கு அருகே புதிதாக இராணுவ முகாம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கல்முனை - மட்டக்களப்பு வீதியிலுள்ள காத்தான்குடி ஆரையம்பதி எல்லையில் சோதனை நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ-165)

## சைவ சித்தாந்த நினைவுரை

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஞாயிறு தோறும் இலவசமாக சைவ சித்தாந்தப் பயிற்சி அளித்து வரும் சைவ சித்தாந்த உயர் ஆய்வு நிறுவனம் சனிக்கிழமைகளில் சைவ சித்தாந்தச் சான்றோர் நினைவுப் பேருரைகளை நடத்த ஏற்பாடு செய்து வருகின்றது. (த)

## வேலணை உ. அ. அ. பிரிவில் இடம் பெயர்ந்தோர்

யாழ்ப்பாணம், செப். 10

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் வேலணை, சரவணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து, முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளவர்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்படவுள்ளன.

இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளவர்கள் தாமிகள் முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளதை உறுதிப்படுத்தி உதவி அரச அதிபரினால் மேலொப்பமிடப்பட்ட அந்தப் பகுதி கிராம சேவகரின் கடிதத்துடன் எதிர்வரும் 14 ஆம், 15ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் அல்லைப்பிட்டியில் இயங்கும் வேலணை உதவி அரச அதிபர் பணிமனையில் சமூகமளிக்கும்படி வேலணை உ.அ. அதிபர் அறிவித்துள்ளார்.

(த - 167)


## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ்ப்பாண - பேராதனை பல்கலைக்கழக

★ கலை முதற் தேர்வு G. A. Q.

★ வர்த்தக முதற் தேர்வு - 1st In Com

A/Lல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ யாழ்ப்பாண பல்கலைக் கழக

விண்ணப்ப முடிவு திகதி:

30 - 09 - 1991

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:

14 - 09 - 1991

[காலை 8 - 00 மணி]

★ பேராதனை பல்கலைக்கழக

விண்ணப்ப முடிவு திகதி:

05 - 10 - 1991

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:

05 - 10 - 1991

[காலை 8 - 00 மணி]

★ பதிவுகள், விரிவுரைகள் பற்றிய விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

புதிய உயர் கல்லூரி

*New College of High Studies*

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ/0447)


## புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி நினைவு தின சிறப்புமலர்



வள்ளல் மழவராயர் கந்தையா

# நாவலரின் அடியொற்றி உருவாகி, வளர்ந்த கல்லூரி

எங்களுடைய நல்ல வாழ்க்கைக்கு, கல்வி தருகின்ற தொழிலும், நன்னெறிப் பண்பும், எமது உயிரைப் பாதுகாக்கின்ற உடம்பின் ஆரோக்கியமும் முக்கியமானவை. இந்த மூன்று அருஞ்செயல்களைக் காட்டியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்று சான்றோர் கூறுவர்.

நாவலர் அவர்களைப் போலவே, அறிவுப் பரம்பரையாய் நின்று- அடியொற்றி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியையும் சிவாலயத்தையும் அன்னசத்திரத்தையும் ஆக்கித்தந்து முன்னோடியாய் நின்றவர், வள்ளலார் மழவராயர் கந்தையா அவர்கள்.

இவர்கள் செய்த நற்றவத்தின் வழியில் இன்று பலர் உயர்ந்த தொழில்களும், சைவப் பண்புகளும், உயிர் உடம்பின் ஆரோக்கியமும் உள்ளவர்களாய் மகிழ்ச்சியுடன் வாழ்வதைக் கண்கூடாக அறிகின்றோம்.

எனவே வள்ளலார் அவர்களது நற்செயல்களின் நினைவுகளைக் கொண்டிருப்பதுடன் மட்டுமன்றி அவர்களது வழியில நின்று எமது தகுதிக்கு ஏற்ப சிறிதாயினும் உதவி செய்வோமானால் நாங்களும் நல்ல வண்ணம் வாழ்வது நிச்சயமே.

அன்ன சத்திரம் அரனுக் காலயம் மன்னு கல்வியின் மாணுகல் லூரியென் றின்ன மூன்றையும் சந்திடு வள்ளல்சீர் உன்னி வாழ்பவர் உத்தமர் ஆவரே.

வே. சந்திரசேகரம்பிள்ளை
அதிபர், சோமஸ்கந்த கல்லூரி

## ஆசிச் செய்தி

இன்றைய நன்னாள் செப்டம்பர் பத்தாம் திகதி எமது அறவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா பிறந்த பொன்னாள். கார்நிகர் கொடையினரான அமரர் மழவ கந்தையா அன்னசத்திரமும், அரன் ஆலயமும், சோமஸ்கந்த வித்தியாலயமும் அமைத்து; இப்பிரதேச மக்களுக்கு வயிற்றுப்பசியும், ஆன்மீகப் பசியும், அறிவுப்பசியும் போக்க வழி சமைத்து வைத்தவர்.

பாரதியார் கூறியதுபோல அன்னசத்திரம் ஆயிரம் அமைத்திலும் ஆலயம் பதினாயிரம் அமைத்திலும் வார்க்க மழவராயர் கந்தையாவுக்கு தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் பெருகி புகழ் இன்று வரை நின்று நிலவுவதற்குக் காரணம், 'அன்னயாவினும் புண்ணியம்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்த'லுக்கு சமமாக அமைந்த யாழ்-புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த வித்தியாலயத்தை அமைத்ததாகும். அது ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேருன்றி இப்பிரதேசமெங்கும் அறிவொளி பரப்பி அஞ்ஞான இருள் அகற்றும் மெஞ்ஞான சூரியனாக விளங்குகின்றது.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரின் அமுதமாகும். காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் அது ஞாலத்தின் மாணப் பெரிது என்றும், தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக் கொள்க என்றும் அறநூல்கள் கூறும். எனவே நாமும், அறவள்ளல் இப்பிரதேச மக்களுக்கு ஆற்றிய சேவையை செய்நன்றி அறிந்து போற்றுவோமாக! வாழ்க சோமஸ்கந்த! வளர்க அறவள்ளல் மழவ கந்தையா புகழ்!

சி. சிற்றம்பலம்:
'மழவர்வழி அறக்காவலர்'

ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விசுவநாதசுவாமி தேவஸ்தானம்,
புத்தூர்.


''வாழ்க சோமஸ் கந்தகல்லூரி''
சகல விதமான புடைவை தினுசுகளையும் கூறைச்சேலைகளையும் எண்ணம் போல் தெரிவு செய்ய
★ விக்கினேஸ் ரெக்ஸ் ★
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சகல விதமான புடைவைத் தினுசுகள் கூறைச்சேலைகள்,
சிறுவர் சிறுமியர்களுக்கான
ரெடி மேட் ஆடைகளுக்கு
வாகினி ரெக்ஸ்ரைல்ஸ்
81, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சகல விதமான
இலங்கை, இந்திய புடைவைகளுக்கு
ஏற்ற ஸ்தாபனம்
★ ரவி அன் ராஜ் ★
77, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

''வளர்க ஸ்தாபகரின் தொண்டுகள்''
எல்லா விதமான
அலங்காரப் பொருள்களுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்
சாந்தகுமார் பான்சி றேடேர்ஸ்
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

'வள்ளல் மழவராயர் கந்தையா நாமம்' வாழ்க பல்லாண்டு
த. சோமசுந்தரம்
முறிவு நெரிவு வைத்திய நிபுணர்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

'வளர்க மழவராயர் கந்தையா தொண்டு'
சகல விதமான நவ நாகரீக
அலங்காரப் பொருள்கள்
பாடசாலை மாணவர்களுக்கான
உபகரணங்கள் முதலியவற்றுக்கு
★ புத்தூரில் ★
நீங்கள் நாட வேண்டிய இடம்
★ விநாயகர் ஸ்தாபனம் ★
பிரதான வீதி, புத்தூர்.

★ வாழ்க சோமஸ்கந்தா
★ வளர்க வள்ளலார் பணி
எல்லா விதமான புடைவைகள்
சிறுவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள்,
கூறைச்சேலைகள்,
பாடசாலை மாணவர்களுக்கான
பொருள்கள்,
அலங்காரப் பொருள்கள் என்பவற்றுக்கு
நீங்கள் புத்தூரில்
நாட வேண்டிய இடம்
★ அம்பாள் புடைவை அகம் ★
பிரதான வீதி, புத்தூர்.

வள்ளல் மழவராயர் கந்தையா
அவர்களின் நினைவு நாள்
★ சிறப்புற வாழ்த்துகின்றோம் ★
எல்லா விதமான புடைவைகளுக்கும்
சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்
★ லிங்கம் சில்க் ஹவுஸ் ★
மினா ரெக்ஸ் இன்டஸ்ரீஸ்
பிரதான வீதி, புத்தூர்.

[18046]


## நாடாளுமன்ற ஆட்சி முறை பற்றி அஷ்ரப்

கொழும்பு, செப். 10

சிறுபான்மையினரின் உரிமைகளை ஒழித்த நாடாளுமன்ற ஜனநாயக முறை மீண்டும் தேவைதானா?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல எம்.பியுமான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் விடுத்த அறிக்கையில் இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்த 29 ஆவது ஷரத்தையும் செனெட் சபையையும் ஒழித்தது நாடாளுமன்றம்தான். இந்த நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் தேவைதானா? என்றும் ஜனாப் அஷ்ரப் தமது அறிக்கையில் கேட்டிருக்கிறார். (இ-எ)

## 1980 வேலை இழந்தோர் விவரம்

1980 ஜூலை பொது வேலை நிறுத்தத்தின் போது வேலை இழந்தவர் பற்றிய விபரங்களை தொழிலமைச்சு அமைச்சு சேகரித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.


யாழ். / மாவட்ட மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

அரசாங்க எழுதுனர் சேவை
கிராம அலுவலர் (G.S.) சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள 500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

போட்டிப் பரீட்சை
விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 14 - 09 - 1991 மு. ப. 9 மணி

பாடநெறி:- மொழித்தேர்ச்சி, பொது உளச்சார்பு

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம்.

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD. - JAFFNA.
(... அருகாமையில்)
[இ-0449]

யாழ். / பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
(முற்றிலும் பல்கலைக்கழக வசதிகளைக் கொண்ட நிறுவனம்)

G. A. Q:- LECTURES IN DAY TIME
LECTURES IN SAT. & SUN.
ஆரம்பம்: 14 - 09 - 1991 (காலை 8 மணி)

1st in Commerce
LECTURES IN DAY TIME
LECTURES IN SAT. & SUN
ஆரம்பம்: 14 - 09 - 1991 (காலை 8 மணி)

மு. குறிப்புகள்:-
(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும், விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்;
(ஆ) நூலகவசதி மற்றும் வசதிகளைக் கொண்ட நிறுவனம்;
(இ) G.A.Q., 1st In Com. Day Time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்.
(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளர்களைக் கொண்டிருக்கும்.
(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள் இந்நாளும் முகவரியில் ஆரம்பமாகும்.

The College of Higher Studies
Analpanthy, Jaffna.
[ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்]
[0503]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### தெற்குப்போர் IV

மக்களாட்சி அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால், சிறுபான்மையினரின் உரிமைகள் பேணப்பட்டு அவர்களும் மக்களாக வாழ வேண்டுமானால் —

வெஸ்ட்மினிஸ்டர் முறையை மாற்றி நேற்றுக் கூறியது போன்ற மாற்று ஆட்சி முறைகள் உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் அரசமைப்பு, சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் ஏனையோருக்கும் சகல உரிமைகளையும், சமநீதியையும், உண்மையான நியாயத்தையும் வழங்குவதாக அமைய வேண்டும்.

புதிய - மாற்று - ஆட்சி முறையில் தமிழர்கள் சமபங்கு உள்ளவர்களாக இருக்கத்தக்க விதத்தில் அது இயற்றப்பட வேண்டும். தங்கள் உரிமை எதற்காவது பாதிப்பு விளைவிக்கப்படுகிறதா என்பதை அவர்களே ஆராய்ந்து, அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அத்தகைய சட்டங்களை, செயற்திட்டங்களை தடுக்கும் அதிகாரம் தமிழர்கள் வசம் இருக்க வகைசெய்யும் புதிய ஆட்சிமுறை தேவை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையும் தமிழர்களுக்குப் பாதகமானதே. அடுத்த பதவிக் காலத்துக்கும் தெரிவாக வேண்டும் என்ற ஆசையினால், ஜனாதிபதி ஒருவர் அனேகமாக, பெரும்பான்மை இன மக்களின் வாக்கு வங்கியையே நம்பி இருக்கிறார். அதனால் அவர் பெரும்பான்மை இன மக்களுக்கே உரிமைகளை வழங்கவும், வசதிகளைச் செய்யவும் உந்தப்படுவார்.

அந்த உந்துதலின் வேகத்தில் அவர் தமிழர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளையும், செய்ய வேண்டிய வசதிகளையும் மறந்துவிடலாம்; அல்லது புறக்கணித்து ஒதுக்கிவிடலாம்.

தமிழர்களின் ஆதரவு இன்றி, சிங்களவர்களின் வாக்குகளுடன் மட்டுமே ஜனாதிபதி ஒருவர் பதவிக்கு வர முடியும் என்ற நிலைப்பாடு இப்போது உண்டு. தனிமனிதர் ஒருவரிடம் அதிகாரங்கள் குவிவது எப்படி ஆபத்தானதோ அதே போல சிறுபான்மை இனத்தினரை அசட்டை செய்துவிட்டு ஒருவர் பதவிக்கு வரமுடியும் என்பதும் மிக மிக ஆபத்தானதாகும்.

ஆகையால் அதில் மாற்றம் செய்யும் உத்தேசம் இருந்தால், மொத்தத் தமிழ் வாக்காளர்களில் 60சத வீதத்துக்கு மேற்பட்டவர்களின் ஆதரவு பெற்றால் மட்டுமே ஒருவர் ஜனாதிபதியாக வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட வேண்டும்.

பொதுவாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை சர்வாதிகாரத்துக்கு வழி வகுப்பதாகும். மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதால் மட்டும் ஜனாதிபதி பதவிக்கு வரும் ஒருவர், மக்களாட்சிக்கு வகை செய்கிறார் என்ற அர்த்தமாகாது!

மக்களாட்சி என்ற பேரில் அவர் தனிமனித ஆட்சியே நடத்துவார்; சர்வாதிகாரமே புரிவார். அதுவும் நாடாளுமன்றத்துக்கு, மக்களுக்கு பதில் கூறவேண்டிய கட்டாயம் இல்லாது. அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் இலங்கை ஜனாதிபதியிடம் குவிக்கப்பட்டிருப்பதால், அது பூரண சர்வாதிகாரமாகவே முடியும். அதுவே தெற்கில் அரசமைப்புப் போர் தொடங்கியதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

## ஆந்திர-தமிழக எல்லையில் 3 இலங்கைத் தமிழர் கைது

ஆந்திர - தமிழ்நாடு மாநிலங்களின் எல்லைப்புறப் பகுதியான வரதபாளையம் என்னும் இடத்தில் வைத்து மூன்று இலங்கைத் தமிழர் கைது செய்யப்பட்டனர்.

20 - 22 வயதுக்கு இடைப்பட்ட இவர்களின் பெயர்கள் சந்திரகுமாரன், யோகேஸ்வரன், மதிகுமார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களிடமிருந்து ஒரு சைத் துப்பாக்கி, 34 சுற்று தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது. (த-எ)

## அகதிகள் தாயகம் திரும்ப விரும்புகின்றார்களா?

### கண்டறிய மாநில அரசு பணிப்பு

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் கொண்டுள்ளனரா என்பதைக் கண்டறியுமாறு அதிகாரிகளுக்கு தாம் உத்தரவிட்டிருப்பதாக தமிழக மாநில வருவாய்த் துறை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்தார்.

மதுரையிலும் அதன் சுற்றுப் புறப்பகுதிகளிலும் உள்ள ஈழ அகதிகளின் முகாம்களை சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

தற்போது மாநிலத்தில் ஒரு லட்சத்து 34 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகள் உள்ளனர். இவர்கள் தாயகம் திரும்பும்படி கட்டாயப் படுத்தப்படமாட்டார்கள்.

அகதிகளுக்கும் போராளிகளுக்கும் இடையே வேறுபாடு கண்டறியப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

—இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [உ-எ]

### எம். ஜி. ஆரின் பூதவுடல் இருந்த வண்டியிலிருந்து

## அப்போது ஜெயலலிதாவைத் தள்ளியவர் இப்போது பொலீஸாரால் கைது!

முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் காலமானபோது அவரின் பூதவுடல் வைக்கப் பட்டிருந்த வாகனத்தில் அமர்ந்திருந்த ஜெயலலிதாவை வெளியே தள்ளி விட்டதாகக் கூறப்படும் திரு. கே. பி. இராமலிங்கம் என்பவரை சென்னைப் பொலீஸார் கைது செய்தனர்.

அச் சம்பவம் இடம்பெற்ற போது திரு. இராமலிங்கம் அ. தி. மு. க. ஜானகி அணியில் இருந்தார். இப்போது தி. மு. க.வில் அவர் இருக்கிறார்.

சென்னை நீதிமன்றம் அவரை நேற்று பிணையில் விடுதலை செய்தது.

இதே வேளை பொலீஸார் தங்கள் எல்லையை மீறி இவ் விஷயத்தில் செயற்பட்டிருப்பதாக தி. மு. க. பேச்சாளர் ஆலடி அருணா தெரிவித்துள்ளார். (த-எ)

## இந்திய - சோவியத் உடன்படிக்கை; பிரதமர் ராவ் கிளப்பிய சந்தேகம்

பொன், செப். 10

கடந்த மாதம் புதுப்பிக்கப்பட்ட இந்திய — சோவியத் நட்புறவு உடன்படிக்கையின் எதிர்காலம் பற்றி பிரதமர் நரசிம்மராவ் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

ஜேர்மன் தலைநகர் பொன்னில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து இந்தியப் பிரதமர் சொன்னதாவது;

1971 இல் செய்து கொண்ட இந்த உடன்படிக்கையை மேலும் 20 ஆண்டுகளுக்கு புதுப்பித்துவிட்டோம்.

சோவியத்தில் இன்று நமது நண்பர்களாக இருப்பவர்கள் நாளை எப்படி இருப்பரோ தெரியாது. உடன்படிக்கையின் எதிர்காலம் பற்றி பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் - என்றார். [உ-எ]

## கரன்ஸி கடத்த முயன்ற தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, செப். 10

ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுக்களைக் களவாகக் கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளிடம் பிடிபட்டார்.

கனேடிய பாஸ்போர்ட் வைத்திருந்த இந்த இளைஞர் சிங்கப்பூர் செல்ல முயன்ற சமயம் கைதானார்.

சுங்கத் திணைக்களம் இந்த நபருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தது. அபராதத் தொகையை அவர் செலுத்தினார். (உ-த)

## கெடுபிடிகளுக்கு மத்தியில் மன்னார் - கற்பிட்டி பயணம்

மன்னார், செப். 10

மன்னாரில் இருந்து கற்பிட்டிக்குப் படகு மூலம் பிரயாணம் செய்பவர்கள் பல கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே பிரயாணம் செய்கின்றனராம்.

பிரயாணத்துக்கு முன்பும் பிரயாணத்தின்போதும் அவர்கள் பல இடங்களில் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டிய நிலையில் இருந்து வருகின்றனர்.

முதலில் அவர்கள் தமது பகுதி கிராம சேவகரிடமும் பின்னர் உதவி அரசாங்க அதிபரிடமும், தொடர்ந்து மன்னார் நகர கமாண்டரிடமும், படகில் ஏறும்போது தாழ்வுப்பாடு இராணுவ அதிகாரியிடமும், இறுதியில் கற்பிட்டி கடற்படை அதிகாரியிடமும் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

### இன்று வெளிவரும்

யாழ்ப்பாணம், செப். 10

''சாளரம்'' — இளையோர் திங்கள் இதழின் செப்டம்பர் வெளியீடு இன்று வெளியாகின்றது.

கல்வி, இயற்கை மாகாணம், போர், மருத்துவம், பண்பாடு, விளையாட்டு வரலாறு உட்பட பல்வேறு [illegible] இடம்பெற்றுள்ளன. (உ)

#### ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை:

## பிரேமாவுக்கு எதிரான வழக்கு எப்போது விசாரித்து முடியும்?

கொழும்பு, செப். 10

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் ஆரம்பமானது.

1989 மே மாதம் இந்த மனு மீதான விசாரணையை ஆரம்பித்த ஐந்து நீதியரசர்களில் இருவரே நேற்று நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருந்தனர். நேற்றைய விசாரணையில் பங்கு பற்றிய ஏனைய மூன்று நீதியரசர்களும் புதியவர்களாவர்.

நேற்று விசாரணைக்கு தலைமை வகித்த பிரதம நீதியரசர் திரு. ஹேர்ட் தம்பையா அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஓய்வு பெறும் போது அவரது இடத்துக்கும் புதிய நீதியரசர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

அப்போது மனு மீதான விசாரணையை ஆரம்பித்த நீதியரசர்களில் ஜி. பி. எஸ். டி. சில்வா ஒருவர் மட்டுமே விசாரணை நடத்தும் நீதியரசர் குழுவில் இருப்பார்.

ஆரம்ப நீதியரசர் குழுவில் இடம்பெற்ற நீதியரசர் அமரசிங்க 1989 நவம்பரில் நோயுற்றதை அடுத்து அவரது இடத்துக்கு நீதியரசர் பத்மநாதன் இராமநாதன் நியமிக்கப்பட்டார்; நீதியரசர் ஜமீல் கடந்த ஜனவரியில் ஓய்வு பெற்றதை அடுத்து அவரது இடத்துக்கு நீதியரசர் ஸ்ரான்லி குணவர்த்தனா நியமனம் பெற்றார்.

ஆரம்ப நீதியரசர் குழுவுக்கு தலைமை வகித்த பிரதம நீதியரசர் திரு. பாரிந்த ரணசிங்க அண்மையில் ஓய்வு பெற்றதை அடுத்து அவரது இடத்துக்கும் புதிய நீதியரசர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

கடந்த இரண்டேகால் ஆண்டுகளாக நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையின் பதிவுகள் 20 ஆயிரத்து 300 பக்கங்களில் 'டைப்' செய்யப் பட்டுள்ளன.

மனுதாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சார்பில் 546 பேரும் எதிர்மனுதாரரான ஜனாதிபதி பிரேமதாஸாவின் சார்பில் 332 பேரும் இதுவரை சாட்சியமளித்துள்ளனர்.

இன்னும் பல நூற்றுக்கணக்கான சாட்சிகள் விசாரணைக்கு அழைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில்—

இடையில் புதிதாக நியமிக்கப்படும் நீதியரசர்கள், நடந்து முடிந்த விசாரணைகள் பற்றிய— 20 ஆயிரத்துக்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட — பதிவுகளைப் படித்து, பின்னர் விசாரணையைத் தொடர்ந்து நடத்தி, தீர்ப்பு வழங்குவது என்பது சுலபமான காரியமல்ல என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதியாக திரு.பிரேமதாஸா தெரிவு செய்யப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### சோவியத் படைகள் புறப்பாடு

மொஸ்கோ, செப். 10

சுதந்திர நாடான லித்துவேனியாவில் இருந்து சோவியத் துருப்புகள் வெளியேற ஆரம்பித்துள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இராணுவ வாகனங்கள் அணி, அணியாக தலைநகர் வில்நியஸை விட்டு நேற்று முதல் வெளியேறத் தொடங்கின. [உ-எ]

### தாஜிஸ்தானும் சுதந்திர பிரகடனம்

மொஸ்கோ, செப். 10

சோவியத் குடியரசுகளில் ஒன்றான தாஜிஸ்தானும் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து நேற்று சுதந்திர பிரகடனம் செய்து கொண்டது.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்லும் பதினோராவது குடியரசு இதுவாகும். (இ)

### இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 10

நல்லூர் உற்சவ காலத்தை யொட்டி நடைபெறும் இசை அரங்கின் தொடர்ச்சியாக வைரவர் திருவிழா தினமான இன்று ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் கே. சாந்தன், பார்வதி சிவபாதம் ஆகியோரின் இசை நிகழ்ச்சி நடைபெறும். (த)

### பெருமாள் கோவில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 10

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் கொடியேற்றம் நாளை புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறும். (த)

### வீர மரணம்

யாழ்ப்பாணம், செப். 10

மணலாறுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதலில் கடந்த ஞாயிறன்று வீரமரணமடைந்த சில பெண் போராளிகளின் விவரம் வருமாறு:-

பரிமளா [சுந்தரசாமி சந்திரபவானி - திருநெல்வேலி], மதுரா [பரமவடிவம்மாள் - சாவகச்சேரி], கல்பனா [கனகரட்ணம் அருள்நிதி - அல்வாய்], சுஜா [கணபதிப்பிள்ளை ரவீஸ்வரி - சுரவெட்டி], அக்கினோ [இராசரட்ணம் கலைவாணி - [illegible]], [illegible] [தயா[illegible] - திருநெல்வேலி] [உ]

#### காத்தான்குடிச் சம்பவம் :

## குண்டு வைக்கப்பட்ட வாகனத்தை இழுந்து வந்த கார் சிக்கியதாம்!

கொழும்பு, செப். 10

காத்தான்குடியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குண்டு வைக்கப்பட்ட வாகனத்தை கட்டி இழுத்து வந்த காரை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

குண்டு வைக்கப்பட்ட வாகனம் காத்தான்குடி பொலீஸ் நிலையத்திற்கு அருகில் வெடித்ததும் இதில் 8 பேர் கொல்லப்பட்டதும், 20 பேர் காயம் அடைந்ததும் தெரிந்தவையே.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி ஒருவர் கைதானார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றனர். (இ-எ)

### தி. மு. கழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடப்புச் செய்தார்.

இதற்கு முன்னதாக சட்டசபையில் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி சூடான விவாதம் இடம்பெற்றது.

நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது தி. மு. கவைச் சேர்ந்த எம். எல். ஏ. பரிதி இளம்வழுதி பேசுகையில்—

''தி. மு. க. ஆட்சிக்கு முன்னர் இருந்த அ. தி. மு. க. ஆட்சியிலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுக்கப் பட்டது'' என்றார்,

அக்கட்டத்தில் நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் குறுக்கிட்டு ''அப்படி ஆதரவளித்தது உண்மைதான். ஆனால் விடுதலைப் புலிகள் வன்முறையில் ஈடுபடத் தொடங்கிய பின்னர் அந்த ஆதரவு விலக்கிக்கொள்ளப் பட்டது'' என்று சொன்னார்.

சட்ட அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி ''விடுதலைப் புலிகள் இந்திய விரோதிகளாக, குறிப்பாக தமிழக விரோதிகளாக மாறிய பிறகு அவர்களுக்கு ஆதரவு விலக்கப்பட்டது'' என்று சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பேசுகையில்—

''தி.மு.க. ஆட்சியில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மிகப் பெரிய கட்டுமானத்தை உருவாக்கினர். இதற்கு தி. மு. கதான் பொறுப்பு'' என்று கூறினார்,

### அமெ. - இந்திய உறவில் புதிய திருப்பம்

இந்திய - அமெரிக்க உறவில் புதிய அத்தியாயம் ஏற்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்திய நாளிதழ் 'இந்துஸ்தான் டைம்ஸ்' தனது வாஷிங்டன் செய்தியாளரை ஆதாரங்காட்டி இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

கேந்திர பாதுகாப்பு அம்சங்கள் குறித்து இரு நாடுகளுக்குமிடையே புதிய அணுகுமுறை ஒன்று ஏற்படும் சாத்தியங்கள் தென்படுகின்றன என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தோனேசியாவிடம் தலைமைப் பதவி

அணிசேரா இயக்கத்தின் அடுத்த மூன்றாண்டு காலத்திற்கான தலைமைப்பதவிக்கு இந்தோனேஷியா தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

அப்பதவிக்கு போட்டியிட்ட நிக்கரகுவா கடைசி நேரத்தில் வாபஸ் வாங்கிக் கொண்டது.

### மாதிரி விண்ணப்பம் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், செப். 10

வளைகுடா யுத்தம் காரணமாக குவைத்தில் இருந்து தாயகம் திரும்பியோர் நஷ்டஈடு பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தின் மாதிரி யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இவ்வாறு தாயகம் திரும்பியோர் எண்ணிக்கை யாழ். மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்துக்கும் அதிகம் என்று யாழ். செயலகத்தின் மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

விண்ணப்பப் படிவத்தை விளம்பரப்படுத்தி, விபரங்களைச் சேகரித்து அவற்றை நேரடியாக தொழில் திணைக்களத்திடம் தாம் சமர்ப்பிக்க விரும்புவதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரேமாவுக்கு எதிரான..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி) டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இவ் வழக்கு, அவரது தற்போதைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் விசாரித்து முடியுமா என்பது கேள்விக்குறியே என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. [உ]


### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நூல் நிலையத்திற்கு நூல்களைச் சேகரிக்கும் பணி

யாழ். மத்திய கல்லூரியின் நூல் நிலையமும், நூல்களும் கடந்த கால போர்ச் சூழ்நிலையால் முற்றாகச் சேதமடைந்துள்ளன. பழைய மாணவர் சங்கம் மேற்படி நூல் நிலையப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர், யாழ். மத்திய கல்லூரியில் அமைந்துள்ள பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகிய முத்திறத்தாரினதும் பேராதரவை ஆவலுடன் வேண்டி நிற்கிறோம்.

இங்ஙனம்:
செயலாளர்,
பழையமாணவர் சங்கம்,
யாழ். மத்தியகல்லூரி.

[18063]


## நாடாளுமன்றில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] னர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவும் சுதந்திரக் கட்சி எம்.பியான அனுரா பண்டாரநாயக்காவும் மஹர என்ற இடத்தில் அத்திவாரக் கல் நடும் நிகழ்ச்சி ஒன்றில் சந்தித்துக் கொண்டனர்.

அப்போது திரு. விக்கிரமசிங்கா, "ஜனாதிபதி உரையைக் குழப்புவதற்கு திட்டமிடுகிறீர்களா?" என்று திரு. அனுரா பண்டாரநாயக்காவைப் பார்த்துக் கேட்டாராம்.

திரு. பண்டாரநாயக்கா செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்ட அறிக்கை ஒன்றை தனது கேள்விக்கு ஆதாரமாக திரு. விக்கிரமசிங்கா சுட்டிக்காட்டினார்.

"அப்படி இல்லை. ஆனால் உங்கள் தரப்பினரைத்தான் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் — அதுவும் விசேடமாக இரண்டு ஜனாதிபதி சட்டத்தரணிகளை" — என்று அநுராபண்டாரநாயக்கா பதிலளித்தாராம்.

திரு. லலித்அத்துலத்முதலியும், திரு. காமினி திஸநாயக்காவும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

## தமிழீழத்தின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] நாம் விழித்துவிட்டோம் என்பதை இன்றைய இந்த நிகழ்வு பிரகடனப்படுத்துகிறது.

தமிழர்களுக்கென்று வரலாற்று ஆவணங்கள் எதுவும் இல்லை. அவற்றைச் சேமிப்பதற்கான முயற்சிகள் இதுவரை நடைபெறவில்லை. சின்னங்கள், சான்றுகள் என்பன பாதுகாக்கப்படவில்லை.

சிங்கள-பௌத்த வரலாறு இந்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொடருவதாக கூறப்படுவதற்குக் காரணம் அவர்களுக்குச் சான்றாகப் பல ஆவணங்கள் இருப்பதுதான்.

சிங்கள வரலாற்றை காலத்துக்குக்காலம் திரித்து, பேரினவாதப் பொய்களைப் புகுத்தி எழுதுவதற்கு பல அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டு வந்தன.

ஆனால் இந்த நாட்டில் தமிழர்களது வரலாற்றை எழுதி வைக்க அப்படியான அமைப்புகள் எதுவும் இருந்ததில்லை. அப்படி எங்கேயாவது இருந்திருந்தாலும் கூட, அவற்றின் செயற்பாடுகள் தடுக்கப்பட்டிருக்கலாம்.

இவ்வாறான ஒரு சதி முயற்சியினால்தான் தமிழர் வரலாறு இங்கு புறக்கணிக்கப்பட்டது.

சில அரசியல் காரணிகளால் இந்த வரலாற்று நூலை முழுமையான ஒரு வரலாற்று நூலாக கொண்டுவர சில காலம் எடுக்கலாம். ஆயினும் மிக விரைவில் இந்த மண்ணில் தமிழ் இனத்தின் வரலாறு ஒரு முழுமையான வரலாற்று நூலாக வெளியிடப்பட வேண்டும்.

—இப்படி அவர் கூறினார்.

வேலணைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் தலைமையில் நடந்த மேற்படி வெளியீட்டு விழாவில் வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நூலை வெளியிட்டு வைத்தார். (இ-5)

## 65 பரல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] ளார்.

வடக்கிற்கு எடுத்துவர தடைசெய்யப்பட்ட பொருள்களின் பட்டியலில் மண்ணெண்ணெய் இடம்பெறாத போதிலும், பட்டியல் வெளியான பின்னர் வடக்கே வந்த இரு கப்பல்களிலும் மக்களுக்கு விநியோகிக்க மண்ணெண்ணெய் எடுத்து வரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## தாண்டிக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ ஜே.ஆர்.ரக கிரனேட்டுகள் -5

என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் அருட்செல்வம் [சுருப்பையா சிவலோகநாதன்—தற்குளம்], லெப்டினன்ட் வேங்கை [மயில்வாகனம் தமிழ்ச்செல்வன்— [illegible]] ஆகிய இருவர் வீரமரணமடைந்தனர். [உ-3-எ]

## நாடாளுமன்ற அதிகாரத்தை அதிகரிக்க 89 இலேயே பிரேமா விரும்பினாராம்!

கொழும்பு, செப். 10

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரிக்க ஜனாதிபதி பிரேமதாசா 1989 ஆம் ஆண்டிலேயே முயன்றார்.

இது தொடர்பாக அவர் அப்போது சபாநாயகருக்கும் கடிதமும் எழுதியிருந்தார்.

ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து ஜனாதிபதி 1989 மார்ச் 24 ஆம் திகதி சபாநாயகருக்குக் கடிதம் எழுதியிருந்தார் என்றும் —

ஆனால் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கான யோசனைகள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும்- அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த]


### ★ றேடியன்ற் ★
### கல்வி நிலையம்

புங்கன்குளம், அரியாலை.

| | |
|---|---|
| **பொருளியல்**<br>திரு. உதயன்<br>ஆரம்பம்: 11-09-1991 | **இந்து நாகரீகம்**<br>செல்வி பிறேமினி<br>ஆரம்பம்: 14 09-1991 |
| **கணக்கியல்**<br>திரு. தனபாலசிங்கம் | **வர்த்தகம்**<br>திரு. இரட்ணம் |
| **அளவையியல்**<br>திரு S.S. மனோகரன் | **தமிழ்**<br>திருமதி மீரா |

(18067)



உ
ஸ்ரீ காமாட்சி துணை
ஸ்ரீ விராட் விஸ்வப் பிரமனே நம.

### ★★ திருமண அழைப்பு ★★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம்
ஆவணி மாதம் 26 ஆம் நாள் [11 - 09 - 1991]
புதன்கிழமை இரவு 6. 22 முதல் 7.21 வரையிலான சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| திரு. முத்தையா இரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் செல்வன்<br>**பாலராஜ் (பாலா)**<br>அவர்களுக்கும் | திரு. நாகேந்திரம் இராஜலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி செல்வி<br>**லட்சுமிகுமாரி (லதா)**<br>அவர்களுக்கும் |

அம்பாள் அருளால் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

இரு வீட்டார் அழைப்பு.
தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
குணரெத்தினம் (குணம்) தம்பதிகள்
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

திரு. திருமதி
நாகேந்திரம் தம்பதிகள்
535, (999) கே. கே. எஸ். வீதி.
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[17909]



உ
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி துணை

### ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் [11 - 09 - 1991] புதன்கிழமை காலை 9-30 முதல் 10-30 மணி வரையுள்ள சித்தயோகமும் துலாலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| கந்தரோடை ஸ்ரீ அருளானந்தப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இரா. சோமகேஸ்வரசர்மா தம்பதிகளின் புத்திரி<br>சௌபாக்கியவதி<br>**★ சரஸ்வதிதேவி ★**<br>அவர்களுக்கும் | மட்டுநகர் மாமாங்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ. பூரணானந்தக் குருக்கள் தம்பதிகளின் புத்திரன்<br>சிரஞ்ஜீவி<br>**★ கீதச்சந்திரசர்மா ★**<br>அவர்களுக்கும்<br>[கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலய பிரதம அர்ச்சகர்] |

இறைவருளை முன்னிட்டு கந்தரோடை ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் விவாகம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தேவரும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சமாவர்த்தனம்:— காலை 5-00 மணிக்கு மணமகன் இல்லத்தில்,
வரவேற்பு:— மாலை 3-00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்,

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

சித்தாந்தபானு
சோ. சுப்பிரமணியக் குருக்கள்,
ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலய பிரதமகுரு.
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

இ. பூரணானந்தகுருக்கள் தம்பதிகள்,
பூ. சந்திரானந்த குருக்கள் தம்பதிகள்,
(ம. ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்),
சு. சந்திரமௌலீஸ்வர ஐயர்,
(ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு. கொட்டகலை).

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

(18060)



### நினைவஞ்சலி

### அந்திம கிரியையும் ஆன்ம சாந்தி வழிபாடும்

திருமதி
**தெய்வானைப்பிள்ளை பொன்னம்பலம்**
(காரைநகர், களபூமி, பொன்னாவளை)

அன்னையே!

இராணுவ நடவடிக்கையில் இடம்பெயர்ந்து நிற்கையில் நீங்கள் அனாதை ஆகிவிட்டீர்கள். நீங்கள் அமரத்துவம் எய்திய செய்தி நீங்கள் நேசித்தவர்களுக்கு எட்டவில்லையோ? நீங்கள் செய்த பயனோ யாரோ புண்ணியவான்கள் உங்கள் பூதவுடலைத் தகனம் செய்துவிட்டார்கள்; இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய குல தெய்வங்களை வழிபடுகின்றோம்.

இங்ஙனம்
ந. சண்முகநாதன்
குடும்பத்தினர்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

(18049]



### மரண அறிவித்தல்

செல்வன்
**தில்லைநாதன் இராகுலன்**
[பழைய மாணவன், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை]

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்வன் தில்லைநாதன் இராகுலன் [8 - 9 - 91] ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

இவர் தில்லைநாதன்-சுப்புலஷ்மி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், கோகிலன், பவித்ரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாதஸ்வர வித்துவான்களான மாவிட்டபுரம் எஸ் கே. இராசா, அளவையூர் சி. சிவலிங்கம் ஆகியோரின் அன்புப் பேரனும், இரவீந்திரன், நரேந்திரன், வள்ளிநாயகி ஆகியோரின் ஆசை மருமகனும், இரங்கநாதன், இராசநாதன், பாஸ்கரன் திருமதி நிமலவாகினி இலங்கமிகாந்தன், திருமதிகமலாசனி ஸ்கந்தராசா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை [11-9-91] தெல்லிப்பளையில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
வி. தில்லைநாதன்

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[17908]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org